# செப்பேடு

**செப்பேடுகள்** என்பவை பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள், வம்சாவழி(பரம்பரை)[1] , போர்க்குறிப்புகள், மரபு வழிக்கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகத் தகடு ஆகும். இவை தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன. இவற்றில் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கும் 280 செப்பேடுகளை படியெடுக்க -முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.[2]

இயற்கையாக ஓலைச்சுவடிகள் அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை. எனவே பண்டைய மக்கள் செப்பேடுகளைப் படிக்கவும் பாதுகாக்கவுமின்றிப் பூமியில் புதைத்து வைத்தனர். மேலும் பல செப்பேடுகள் உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்துக்காக பல செப்பேடுகள் அழிக்கப்பெற்றன. இவற்றை மீறி சில செப்பேடுகள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டன.

செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டோ அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியது என்று கூறமுடியாது. ஏனெனில் செப்பேடுகளை எடுத்துச் செல்வது எளிமையாக இருப்பதன் காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுபட்ட தொலைவான இடங்களில் கூடக் கிடைக்கலாம்.



ஆதலின் கி.பி. 3-ம் நூற்றாண்டில் இருந்து தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கத்தில் வந்தன. ஒன்று தமிழ் என்றும் மற்றது வட்டெழுத்து என்றும் கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டு அரச்சலூர் கல்வெட்டு ஆகும்.

இவ்வாறு தோன்றிய தமிழ் எழுத்துகளும் வட்டெழுத்துகளும் படிப்படியாக பிரிந்து வளர்ந்து முழு நிலையை அடைந்தன. இவை வளர்ச்சி பெற காரணங்கள் உண்டு. விரைவாக எழுதுதலால் ஏற்படும் மாற்றம், அழகுக்காக இடப்பட்ட கோடு வளர்ச்சி பெறல், எதன்மேல் எழுதப்படுகின்றதோ அப்பொருளின் திண்மை என்ற காரணங்களை முக்கியமாகக் கூறலாம்.

எழுத்துகளுக்கு அழகு அளிப்பதற்காக சில வடிவங்களின் தலையில் முதலில் குறுக்கே கோடு இடப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட வடிவை கையை பல முறை எடுத்து எடுத்து எழுதல் வேண்டும். ஆனால் இதையே விரைவாக எழுதும் போது கையை எடுக்காமலேயே எழுத முற்படுகிறோம். இதன் பயனாய் எழுத்துகள் படிப்படியாய் மாற்றம் பெறுகின்றன. இது தவிர கல்லில் எழுதுவதற்கும் ஓலையில் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு. அதனாலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



தமிழகத்தில் வழக்கிலிருந்த மிகத்தொன்மையான எழுத்துகளை 'தமிழி' என்று பண்டைய நூல் குறிக்கிறது. அ மொழியை எழுத வழங்கப்பட்டுள்ளன. கி.பி. மூன்றாம் நூற்றாண் அவ்வெழுத்துகளில் எளிதில் அறியக்கூடிய சில உருவ மா காணப்படுகின்றன. இம்மாற்றங்கள் இரண்டு பிரிவைத் தோற் வகையில் காணப்படுகின்றன. ஒன்று தமிழ் என்று அழைக் எழுத்துகளின் தொடக்கத்தையும், மற்றது வட்டெழுத்து அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கத்தையும் காட் ஆயினும் இருவகை எழுத்துகளும் ஒரே கல்வெட்டில் காணப்படு



# செப்பேடு எண். 10

(விளக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | செப்பேடு வழங்கியவர் | : | திருமலை ரகுநாத சேதுபதி மன்னர். |
| 2. | செப்பேடு பெற்றவர் | : | இராமேசுவரம் திருக்கோயில் ஆதினகர்த்தர் இராமனாத பண்டாரம். |
| 3. | செப்பேட்டின் காலம் | : | சாலிவாகன சகாத்தம் 1570, சர்வசித்து ஆண்டு மாசி மாதம் (A.D. 1647). |
| 4. | செப்பேட்டின் பொருள் | : | இராமேசுவரம் ஸ்ரீ இராமனாத சுவாமி — பர்வதவர்த்தினி அம்மன் பூசை நை வேத்தியம் ஆவணி மூலத்திரு நாள் விழாச் செலவுகளுக்கு முகிழ்த்தகம் கிராமம் தானம். |

இந்தச் செப்பேட்டில் திருமலை ரகுநாத சேதுபதி மன்னரைப்பற்றிய அறுபது விருதாவளிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகளில் முந்தைய உடையான் சடைக்கன் சேதுபதி தளவாய் கூத்தன் சேதுபதி மன்னர்களது செப்பேடுகளில் பொறிக்கப் பட்டுள்ள விருதாவளிகளுடன் கூடுதலாக பரராஜ செயசிங்கம், அந்தப்பிரகண்டன், பனுக்குவார் கண்டன், ஆரியர் மானங்காத் தான், குன்றில் உயர் மேருவை குன்றாய் வருகினில் பொசித்த வன், கலைதெரியாவிற்பன்னன் என்ற ஆறு புதிய விருதாவளிகள்

# சேதுபதி மன்னர்கள் தானமாக வழங்கிய ஊர்கள்
## (செப்பேடுகளில் கண்டவாறு)

*இராமநாதபுரம் வட்டம்*

1. அத்திஊத்து
2. அல்லிக்குளம்
3. இருவரை வென்றான்
4. உத்தரவை
5. காரையடிமுறிவு
6. காவல்பற்று
7. கருக்காத்தி
8. காராம்பல்
9. குத்தக்கோட்டை
10. கோரைக்குளம்
11. கோவிந்தன்ஏந்தல்
12. சாமநத்தம்
13. தம்பிராட்டி ஏந்தல்
14. தினைக்குளம்
15. திருஉத்தரகோசமங்கை
16. பழஞ்சிறை
17. பனையங்கால்
18. பாலைஏந்தல்
19. புதுக்குளம்
20. பட்டப் பிள்ளான் இரு கூரானேந்தல்
21. மலங்கரை
22. மனையன் ஏந்தல்
23. முத்துப் பேட்டை
24. மாயா குளம்
25. முப்பனை
26. முருக்கடிப் பற்று
27. மேதலை ஓடை
28. மேலச் சீத்தை
29. ரகுநாத மடை
30. வெள்ளா பற்று

*ஆ) பரமக்குடி வட்டம்*

1. அரியக்குடி
2. கங்கை கொண்டான்
3. குளத்தூர்
4. குளவிப்பட்டி
5. கொத்தங்குளம்
6. கொளத்தூர்(அனுமனேரி)
7. கோந்தை
8. கொல்லன் ஊர்
9. செப்பேடு கொண்டான்
10. சேதுகாவலன்
11. தெஞ்சியேந்தல்
12. தியாகவன்சேரி
13. பாண்டியூர்
14. பேய்ராமத்தேவன்ஏந்தல்
15. முதலூர்
16. மும்முடிசாத்தன்
17. வெங்கிட்டங்குறிச்சி

*இ) முதுகுளத்தூர் வட்டம்*

1. ஆதன் கொத்தன் குடி
2. இறையான் ஏந்தல்
3. கருங்குளம்
4. கருங்குளம்
5. கள்ளிக்குளம்
6. கருக்காத்தி

# நடுகல்

**நடுகல்** இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் ஆகும். இவற்றை "வீரக் கற்கள்" என்றும் கூறுவர். நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அல்ல. உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. இந்தியாவிலும் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. இறந்தவர் எவருக்குமே நடுகற்கள் எடுக்கப்படலாமாயினும், வீரச்சாவு அடைந்தவர்களுடைய நடுகற்களுக்கே பெருமதிப்பு கொடுக்கப்பட்டு வந்தது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும் பண்டைக்கால இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

# தமிழ்நாட்டில் நடுகற்கள்

தமிழ் நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந்துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது தவிர சங்கப் பாடல்களிலும், பின்னர் எழுதப்பட்ட நூல்களிலும் நடுகற்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. செங்கம், தருமபுரி, தேன்கனிக்கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலேயே பெருமளவில் நடுகற்கள் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் ஆட்சி செய்த அதியமான் போன்ற அரசர்கள் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டு உள்ளது தெரிகின்றது. தமிழ் நாட்டில் சேரன் , சோழன், பாண்டியன் காலத்திலும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வீரச்சாவு அடைந்த மனிர்தர்களுக்கு மட்டுமல்லாமல், போர்ச் சேவலுக்கு அந்த சேவலின் உருவம் பொறிக்கப்பட்ட நடுகல் அமைக்கப்பட்டுள்ளது.[1]



வேலூரில் ஒரு நடுகல்